**உதவி அமர்வு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**SC No : 124/2015**

| | |
|---|---|
| பெயர் | .. அஜு குமார் (அசா12) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் கார்த்திகா அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

02.04.2025

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது திருநெல்வேலி மாநகர காவல்துறை உதவி ஆணையராக பணியாற்றி வருகிறேன். நான் முன்பு கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 08.09.2014 ம் தேதி நிலைய உதவி ஆய்வாளர் நவநீதன் என்பவர் பதிவு செய்த நிலைய குற்ற எண். 902/2014 இதச பிரிவுகள் 294 பி, 307 வழக்கு கோப்பை நான் விடுமுறையில் இருக்கும்போது நாலாட்டிபுதூர் காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பில் இருந்தபோது முதல்விசாரணை மேற்கொண்டார்.அவர் கடந்த 09.09.2014 தேதியில் காலை 6 மணிக்கு சம்பவஇடம் சென்று சாட்சிகள் மூக்கையா, வசந்தகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் , மாதிரி வரைபடம் தயார் செய்தார். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கினார். அதன்பின்னர் நான் 10.09.2014 தேதி இந்த வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக எடுத்துகொண்டு எதிரிகளை தேடிவந்ததில் அவர்களை கைது செய்யமுடியவில்லை. பின்னர் இந்தவழக்கில் சம்பந்தபட்ட சாட்சிகள் ஜெயக்குமார், ஸ்டீபன், எம். ஜி,ஆர். என்ற செல்லச்சாமி, செல்லத்தாய் பார்வை மகஜரில் சம்பந்தபட்ட சாட்சிகளான மூக்கையா, வசந்தகுமார் காயம்பட்ட நபரை சிகிச்சைக்கு சேர்த்த தேவராஜ் சம்பவத்தை கேள்விபட்ட

முத்தமிழ் செல்வி காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அசோக், முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த நவநீதன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேற்படி சம்பவம் உண்மை என எனது விசாரணையில் தெரியவந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294 பி, 307 படி குற்றஇறுதி அறிக்கை தயார் செய்து கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண். 2 ல் தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

இந்தவழக்கில் சம்பவஇடத்தில் இருந்து வழக்குசம்பந்தபட்ட தடைய பொருட்கள் ஏதாவது கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. இந்த வழக்கில் எதிரிகளிடம் ஒப்புதல்வாக்குமூலம் எதுவும் நான் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். இந்தவழக்கில் எதிரிகள் பயன்படுத்தியதாக குறிப்பிடும் ஆயுதம் இந்தவழக்கில் என்னால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அசா.1 க்கும் கமலக்கண்ணன் என்பவருக்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்து அதுசம்பந்தமாக இருவரும் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் தனித்தனியாக ஒருவர் மீது மற்றொருவர் புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான்.மேற்படி இருவருக்கும் இடையில் கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் Os No. 2/2012 என்ற வழக்கு நடந்தவந்த விவரம் எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. அசா.1 விசாரணையிலும் துலங்கவில்லை. அசா.1 அடிக்கடி காவல்நிலையம் வந்துசெல்லும்நபர் என்றால் தெரியாது.அசா.1 தன்னை வழக்கறிஞர் விஜயமூர்த்தி என்பவர் தாக்கியதாக எங்கள் காவல்நிலையத்தில் புகார் ஏதாவது கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது.அசா.1 கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அவரிடம் புகார்வாக்குமூலம் வாங்கப்பட்டதா என்றால் வாங்கப்பட்டது. அந்த புகார்வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அசா.1 மேல்சிகிச்சைக்காக நாகர்கோவில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அவரிடம் போலிசார் வாக்குமூலம் ஏதாவது வாங்கினார்களா என்றால் இல்லை.அசா.1 புகார்வாக்குமூலம் தான் கொடுத்தார் என்றாலும் புகார்மனுகொடுக்கவில்லை என்றால் சரிதான்.அசா.1 புகார்வாக்குமூலம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.நான் சொல்வதுபோல் நானோ

எனது முந்தைய விசாரணை அலுவலரோ சம்பவஇடம் செல்லவில்லை என்றாலோ, பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார்செய்யவில்லை என்றாலும் அவை வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும் சரியல்ல. நான் கூறுவதுபோல் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் முதல்தகவல்அறிக்கை வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.